புஸ்தகம் 1] 9—4—36. [ஸஞ்சிகை 9

ஸ்ரீ:

அம்ருதவர்ஷிணீ

திருக்குடந்தை

ஸ்ரீ பராங்குச பக்த ஸபையாரால் பிரசுரிக்கப்படும்

மாத ஸஞ்சிகை.

யுவ-ஹூ பங்குனி-மீ திருவிசாகம்.

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி உரை

ஸ்ரீ-உ-வே. இளையவில்லி ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி

இயற்பா

முதல் திருவந்தாதி உரை

ஸ்ரீ-உ-வே. ப. ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஸ்வாமி (ஸிரோமணி)

பிரிந்து ராமன் இப்பாடுபடுகிறாரே,ஒரு பெண் காணுவிடில் அவளைத் தேட இவ்வளவு வருத்தமுறுகிறாரே, இது என்னே! என்றே ஒரு படி முதலில் எண்ணமிட்டுக் கொண்டிருந்தும், அசோகவனிகையில் உபவாஸத்தால் மேனி மெலிவெய்தி அதற்கும் மேலே புழுதிபடிந்துள்ள திருமேனியுடனும் தோற்றுகிற பிராட்டியைக் கண்டமாத்திரத்தில், அவளுடைய திவ்யாவயவ ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களில் முதலிலே கால் தாழ்ந்து, மதியெல்லாமுள் கலங்கி மயங்கி, துஷ்கரம் க்ருதவாந் ராமோஹீநோயதநயாப்ரபு:। தாரயத்யாத்மநோ தேஹம் நசோகே நாவஸீததி॥ (ப்ரபுவான ராமன் எந்த இவளால் விடுபட்டதும் தன்னுடைய தேஹத்தை விடாது தரிக்கிறாரோ; சோகத்தால் தளர்ச்சியுற்று முடிந்துவிடவில்லையோ; அப்படி அவர் செய்ததானது, தேஹம் படைத்த ஒருவராலும் செய்ய முடியாத செயலே யெனச் சொல்லத் தட்டுண்டோ) என்கிறபடி, ஸீதையைப் பிரிந்து இராமன் வாழ்கிறானே; தனக்கு சோபையை உண்டுபண்ணக் கூடியவளாய் 'அநங்யை' என்று சொல்லப்படுகிற இவளை விட்டும் இராமன் ஸத்தை பெற்றிருப்பது எதற்காக; இவளைப் பிரிந்திருக்கிறானென்று பழிபடைத்திருக்குமதிற்காட்டில், இவளைப் பிரிந்து இறந்தான் என இனிதாகப் புகழைப் படைக்கக் கூடாதோ? ராமன் என்ன கார்யம் செய்தான்; ஒருவராலும் செய்யமுடியாத இக்கார்யத்தையே செய்தான்; என்னென்றே பலவாறாகப் பித்தேறிப் பிதற்றிக் கிடந்தாரன்றோ? அங்ஙனேயுள்ள சோபையையுடைய லக்ஷ்மியின் படியைக் கண்ட இவ்வாழ்வார், அந்த லக்ஷ்மி தேவியின் சோபையை செவ்வனேயிருக்கவேணுமென்று சிந்தைசெய்து அவ்வடிவை முதலில் பற்றி அவ்வனுபவத்தில் இழிகிறார்.

இங்கு, பிராட்டியினால் பெருமாளுக்கு சோபையுண்டாகிற்தெனச் சொல்வதால் அப்பெருமாளுக்கு சிறிது குறைகூறப் பட்டதாகிறதில்லையோ வென்னில், அல்ல, புஷ்பத்திற்கு உடன் சேரும் வாஸனையால் பெருமையுண்டானால், அப்பெருமை புஷ்பத்தினுடையதாகவே போற்றப்படுவது போலவும், மாணிக்கத்திற்கு, மிக்க வொளியால் மஹிமையுண்டாகி பெரியவிலை திப்பைக்கொண்டாலும், அம்மஹிமை மாணிக்கத்தினுடையதாகவே மதிக்கப் படுவது போலவும், ஆயிரங்கிரணங்களால் சூரியனுக்கு ஏற்றம்ஏற்பட்டு

அதனால் அவன் எல்லாராலும் ஏற்றப்பட்டாலும் அவ்வேற்றம் சூரியனுடையதாகவே சொல்லப்படுவது போலவும், பத்னியான பிராட்டியின் ஸம்பந்தத்தால் பதியான ஸ்வாமிக்கு பெருமை ஏற்பட்டபோதிலும், அப்பதியின் பிரதானத் தன்மையையே ப்ரகாசிப்பித்துக் கொண்டு விளங்குமாதலால், ஓர் குறைவுமில்லை; இவ்வர்த்தத்தை மூதலித்துக் காட்ட, இங்கு சொன்ன மூன்றுவது திருஷ்டாந்தத்திற்கனுகுணமாக இப்பிராட்டிதானே, அநந்யாராகவேணுஹம் பாஸ்கரேணப்ரபாயதா (எப்படி, ஒளியானது சூரியனுடன் சேர்ந்து, அவனுடனே ஒன்றுசேர்ந்தே தோன்றுகிறதோ, அப்படியே நானும் ஸ்ரீ ராமனுடன் சேர்ந்தே வேறுபடாது தோன்றுமவள்) என்று அருளிச்செய்தாள். மாரீசன், ராவணனுக்குச் சொல்லுமிடத்தும் ஸீதையின் சோபாதிசயத்தைப் பேசி, அச்சோபையைக் கொண்ட வொருவர் தேஜஸ்ஸு தெரியுமா உனக்கு. அது அளவிடமுடியாததென்று நிரூபித்துக் காட்டுமிடத்தில், பிராட்டியினால்பெருமாளுக்கு புகர் என்று சொல்லியிருந்தும் எம்பெருமானின் ப்ராதான்யம் வெளிப்பட, தத்தேஜ:, என்று இவ்வாறுள்ள தத்வார்த்தத்தை த்தெளிவாகத் தெரிவித்துப் பேசினான்.

இவ்வண்ணம் புகர்படைத்த பிராட்டி வஸிக்கும் ஸ்தானத்தை ஏத்துகிறார் நின் வலமார்பினில் என்று.

நின்வலமார்பினில் என்றது, எம்பெருமான் வலத்திருமார்பைச் சொல்லுகிறது. இலக்குமிதேவி, தனக்குப் பிறந்தகமான தாமரைமலரையும் தன் ஸௌகுமார்யத்திற்குத் தக்க திதென்னென்று தள்ளிவிட்டிட்டு, மாலின் மலர்ந்த மார்பையன்றோ மனதிற்கிசைந்ததென மகிழ்ந்து மன்னி நின்றாள். இப்பெருமையை யடியொத்தி, அகலகில் லேனிறையுமென்று லர்மேல் மங்கையுறை மார்பா (பத்மவாஸினியான பெரிய பிராட்டியாரும் க்ஷணகாலங்கூட இவ்விடத்தைவிட்டுப் பிரிந்திருக்க மாட்டேனென்று சொல்லிக்கொண்டு நித்யவாஸம் பண்ணுகிற திருமார்பையுடையவனே) என்று, நம்மாழ்வாரும். பூமன்னுமாது பொருந்திய மார்பன் (பூவில் மன்னியிருக்கிற பெண்ணரசி, பொருந்திநிற்கிற திருமார்பையுடையவன்) என்று, அமுதனாரும், மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறை மார்பன் (உயர்ந்த மலரில் மன்னியிருக்கிற மங்கை

தானும் பெருமகிழ்ச்சியோடுறைகின்ற திருமார்பையுடையவன்) என்று, மிகவும் அழகாக, ஸ்ரீதேசிகன் திருக்குமாரரான நயினாசார்யரும், தென்மொழியில், திருமார்பை, தேன்மொழியால் தெளியப் பேசிநின்றார்கள். வடமொழியிலும், இவ்வைபவத்தை, வேதாந்தா: தத்வ சிந்தாம் முரபிது ரஸியத்பாத சிஹ்நைஸ்தரந்தி (எம்பெருமானின் திருமார்பில் பிராட்டியின் நித்ய வாஸத்தால் ஏற்பட்ட அடிச்சுவட்டினால், பரதத்வமின்னதெனவறியாது பரிதபித்த வேதாந்தங்களெல்லாம் அக்கவலை தீர்த்துக்கொள்கின்றனவோ) என்றிப்படி., ஆழ்வான் முதலிய, அனுபவத்தில் சிறந்தோர்களும் அறிந்தேத்தி நின்றார்கள்.

வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு:— என்றது, அத்திருமார்பில் நித்யவாஸம் பண்ணுகிற யுவதியான பெரிய பிராட்டியாரும் எண்ணிறந்த காலமெல்லாம் வாழவேணுமென்கிறது. அதாவது, பிராட்டியானவள் க்ஷணகாலங்கூட எம்பெருமான் திருமார்பை விட்டுப் பிரிந்து தன்னால் இருக்க முடியாதென மொழிந்துகொண்டு முகில் வண்ணன் திருமார்பை பற்றியிருக்கிறாளாகையாலே, அவ்விள மங்கை, நின் வலமார்பினில் நீங்கின்றி வாழவேண்டுமென வேண்டி நிற்கிறார். மங்கை என்றால் பன்னிரண்டாவது வயதிலிருந்து பதிமூன்றாவது வரையில் உள்ள காலமென்பர். ஆகவே என்றும் இதே வயதான தோற்றத்துடன் தோற்றியிருக்க வேணுமென்றபடி.

"நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு" என்கிற சொற்களின் சேர்த்தியை சிறிது நோக்குமின். பிராட்டியைப் பல்லாண்டுபாடுகிறவிவர், அவளுக்குப்பிறந்தகமான, தாமரைமலரில் இருக்கும் இருப்பைக்காட்டியாவது, அல்லது திருப்பாற்கடலான அவதாரஸ்தலத்தைக்காட்டியாவது பாடவில்லை. அன்றிக்கே, காட்டில் ராமனோடு செல்லுகிற தசையிலோ, கரதூஷண யுத்த ஸமயத்தில் இலக்குமணனிடம் குஹையிலிருந்த இருப்புக்கோ அசோகவனிகையில் தனியே இருந்த இருப்புக்கோ பரிந்து பாடவில்லை. பர்த்தாவின் திருமார்பிலிருக்கும் பெருமைகொண்டு மிகுந்த பாதுகாப்புடன் விளங்கும் தன்மைக்குத் தான்பாடிநிற்கி

ளூர். இதுதான், என், என்னில்? இவனோ, மல்லாண்டதிண் டோள் மணிவண்ணன்; இவனுக்கோ துணிவும் அதிகம், இவன் குறும்புதான், கோதைதன்னாலும், குறும்புசெய்வானோர்மகன், எனக்கூறத்தக்கதாகவிருக்கிறது, ஆகவே, தான், எதிரிகளிடம் சண்டைக்கு முன் நிற்குமவன், எதிரிகள் குறிப்பாகக்கொள்ளு மிடமோ, "மார்பு", ஆனதால், திருமார்பில் வஸிக்கும் தன்மைக் குத்தான் யாதொரு தீங்கும் வாராதிருக்கவேணுமெனப்பாடுகிறார் போலும்.

இப்படி அலர்மேல் மங்கையிடம் பரிவுகொண்டுபாடியதைக் கேட்கலுற்ற பெருமானும், ஆழ்வாருக்கு ஸம்பத்திவ்யாமது விஜயிந: (மதுவென்றவஸுரனை வென்றவனின் அழகிய ஸம்பத்து) என்று சொல்லப்படுகிற லக்ஷ்மிக்கு வாஸஸ்தானமான திருமார் பைக் காப்பாற்ற, லக்ஷ்மீதாம்ந: ப்ருதுளபரிகை:. (லக்ஷ்மியின் ஸ்தானத்துக்கும் பெரியதாழ்ப்பாள்) என்று போற்றப்படுகிற திருக் கைகளையும், ஆச்ரித ரக்ஷணத்தில் விளம்பம் பொறுக்கமாட்டாதே எப்பொழுதும் சங்கசக்கிராத்யாயுதங்களைத் தரித்திருக்கிறபடியை யும் முதலெடுப்பிலேயே காட்டி பயந்தீர்த்துவிடாமல், இவருக்குத் தன் படியைச் சிறிதுசிறிதாகத் தோற்றுவித்து இவருடைய பரி வின் மிகுதியை பாராரனைவரும் பார்த்துப் பரக்கப் பேசுமாறு, செய்யக்கருத்துக்கொண்டு, ஆழ்வாரை நோக்கி, ஓய், உம்மை, வெளியே வெறுமனே, வாயினால் பல்லாண்டு பாடிக் காப்பிடக் கொண்டிருக்கிறேன்; உமக்கு மேல் பரிவுகொண்டு, எதிரிகள் இன் னவிடத்திலிருக்கிறாரெனக் கருதினால், அவ்விடம் தான் சென்று கொன்று வென்றி கொண்டு வரும் தன்மைகொண்ட திருவாழி யாழ்வானை வலத்திருக்கையில் காணீர் என்ன, அந்த திவ்யாயுதத் தின் திவ்யசோபையிலீடுபட்டு அதற்குப் பல்லாண்டு பாடுகிறார். வடிவார் சோதியென்றாரம்பித்து.

வடிவார் சோதி:—என்றது தன் வடிவுமுழுவதும், எம்பெரு மான் வடிவத்தோடும், பரம்பினவொளியுடைமையைக் காட்டுகிறது.

வலத்துறையும்:—என்றது, வலதுபக்கத்தில் பற்றி நின்ற மையைப் பகருகிறது. வலத்துறையும் என்பதால், வலது மார்பில்

இலக்குமிதேவி வாஸம் செய்கிருளானதால், அவளைக்காக்கவேணு மென்றே மிகப்பரிவுகொண்டு தானும் அவ்வலது பக்கத்தையே நாடிக்குடிகொண்டமை குறிப்பிடப்படுகிறது. மேலும், சங்கமானது இடதுபக்கத்தே இருந்தாலும், அதற்கு இங்குபோல் பக்கத்தைக் காட்டும் அடைமொழி இடப்படாமையும் காண்க.

சுடராழியும்:—என்றது, இவ்வாழியைக் காண்கைக்கு மற்ருேர் உதவி தேடவேண்டாதே, தன்னைத்தானே காட்டிநிற்கும் ஒளியுடைமையை உணர்த்துகிறது. உலகுக்கெல்லாம் மங்கள தீப ரேகையாக விளங்கும் பிராட்டிவஸிக்கும் பக்கத்தில் இச்சுடராழியுள்ளது கொண்டு பெரிய நிதிகளின் ஸமீபத்தில் விளக்கேற்றி வைப்பது உலகவியற்கையாகையாலே, எம்பெருமானுக்கு நிதி போன்ற இப்பிராட்டியிருக்கும் பக்கத்திற்கு, நிதியின் பெருமைக்குத் தக்கபடி, கோடிஸூர்ய ஸமப்ரப (கோடிக்கணக்கான சூரியர்கள் ஒரேகாலத்திலுதித்தாற்போலுள்ள வொளியுடையவனே) என்கிறபடியுள்ள திருவாழியாழ்வான் திருவிளக்காய் அமைந்தானே எனவும் கூறலாம். மேலும், அநுகூலருக்கு இவ்வொளி அநுபவ யோக்யமாய் தோற்றச் செய்தேயும், ப்ரதிகூலருக்கு நெருங்க முடியாதபடி, பேரழலாய்த் தோற்றி நிற்குமென்னலாம்.

பல்லாண்டு:—என்றது, இப்பரிவுடைய சக்கரமும் தீங்கின்றி வாழவேணுமென்கிறது. கார்கலந்த மேனியான் (மழை முகில் போன்ற வடிவையுடையவன்) என்கிறபடி, ஒரு ஆயுதமும் ஏந்தாதே இருக்கும் திருமேனி அழகிற்கே பல்லாண்டு பாடவேண்டியிருக்க, கைகலந்தவாழியான் (கைவேறு; திருவாழிவேறு, என்றறியமுடியாதபடி ஒரே படியாகக்கலந்த திருச்சக்கரத்தையுடையவன்) என்கிறபடி, கையும் திருவாழியுமாய், அதிலும் வலத்து உறையும் அவ்வழகிற்குப்பல்லாண்டு பாடவேண்டாவோ என்றபடி.

வலத்துறையும் சுடராழி, என்கிறபடி சக்கரத்தை பிரியாதே வலக்கையில் தரிக்கிருன் என்பதை, எப்போதுங் கைகழலா நேமியான், என்றும், மழுங்காத வைந்நுதிப சக்கரநல்வலத்தையாய், என்றும் "நம்மாழ்வாரும்" அருளிப்போந்தார்.

இங்ஙனம், திருவாழியாழ்வானைக்காட்டி ஆழ்வாரைத் திகைக்கச் செய்தபின், அதோடும் நில்லாதே, சேனை நடுவே சென்று முழங்கும் கடுங்குரலுடைய சங்கையும் காணீர் என்று காட்ட, அதைக் கண்டு அதற்குப் பல்லாண்டு பாடுகிறார் படைபோர் என்றாரம்பித்து.

படை போர்புக்கு முழங்கும்:-- என்றது, தேர், யானை, குதிரை காலாட்கள், என்கிறபடி, நான்குவகுப்பான சேனைகளோடு கூடின யுத்தக்களத்தில், சென்று, அதிரும் குரலுடைத்தானமையைச் சொல்லுகிறது. சக்கிராயுதமானது, எதிரிகளை வெல்லுவதற்காக சற்றுநேரமாவது, திருமாலின் கையை விட்டுச் செல்லவேண்டியதாகவிருக்கும்; சங்கோ வென்றால், அப்படி நாமும் சென்றால் காப்பாராரிவ்விடத்து என்று கலங்கி திருமாலின் கையைவிட்டுப் பிரியாதே கைத்தலத்தே ஏறிக் குடிகொண்டிருக்கும் தன்மையிலேயே தன் குரலை போகவிட்டு பகைவர் குடலைக்கீறிக் கூறுசெய்து கொலை செய்து நிற்கும். இப்பெருமைதான், ஸகோஷோதார்த்த ராஷ்ட்ராணும் ஹ்ருதயாநிவ்யதாரயத் (அந்த சங்கின் பேரொலியானது கௌரவர்களுடையக் குடலை நன்றாகப் பிளந்தது) என்றும், யஸ்ய நாதேந தைத்யாநாம் பலஹாநிரஜாயத (யாதொரு சங்கத்தினுடைய முழக்கத்தாலே அசுரர்களுக்கு பலக்குறைவு உண்டாயது) என்றும், ச்லோகங்களால் பேசப்பட்டதேயாகும். படைபோர் புக்கு முழங்கும், என்பதற்கு, சங்கானது, தான் ஆயுதமாய் ப்ரவேசித்து கார்யம் கொள்ளுமாற்றை இங்கு குறிப்பிட்டமை அறிக.

• அப்பாஞ்சசன்னியமும்:– என்றது, மிகவும் பெருமை கொண்டசங்கம் என்று சொல்லுகிறது. சக்கரத்தைப்போல் கையைவிட்டுப் பிரியாதே இருந்த விடத்திலிருந்தே கார்யத்தை முடித்துவைக்கிற படியைச் சொல்லலாம். அன்றிக்கே, ஆளுக்குத் தகுந்த வேடம் பூண்டு கொள்ளும் சங்கம் என்னலாம். அதாவது, அநுகூலர் வாழவும் ஆநிரையினம் மேயுமிடமிருந்து மீளவும், ஆகாதார் இவ்வொலி கேட்டு மாளவும், என்றிப்படியன்றோ இது கொண்ட கோலமிருப்பது. அதுவுமன்றிக்கே, அன்று பாரதப்போரில் செ

ன்று முழங்கின சங்கம் என்னலாம்; ஈதெல்லாமு மன்றிக்கே, கோலப் பெருஞ்சங்கே என்றும், செல்வப் பெருஞ்சங்கே என்றும், கோதை, கொஞ்சி குலாவிப் பேசுகிற, சங்கின் அழகு, இன்னபடியென்று ஒரு வார்த்தையிட்டுச் சொல்லமுடியாமையாலும், இப்படியுள்ள அழகைத் தன் கண்ணால் கண்டால் அவ்வழகிற்கு என்ன கெடுதிவருமோ என்றஞ்சி, தன் குழந்தைகளை அலங்காரம் செய்த தாய்மார்கள், தன் குழந்தைகளின் அழகைத் தான் நேரில் நன்றாகத் தன் கண்களால் காணில் திருஷ்டி தோஷம் ஏதாவது ஏற்படுமோவென்று எதிரேயுள்ள குழந்தைகளையும் ஒருவாறு அரைக்கண்ணால் பார்க்குமாப்போலே, ஆழ்வாரும், தன்னில் காட்டில் பரிவு கொண்டு எம்பெருமான் கையைவிட்டுப் பிரியாதே எல்லோருக்கும் எதிராக நோக்கிக் களிக்கும்படி சேவைதருகிற அழகிய பாஞ்சன்னிய மென்கிற சங்கத்தை மறைவில் இருக்கும் வஸ்துவைப்போல் நேரே இருக்கும் தன்மையிலும் தான் முகத்தை மாற வைத்துப் பேசி நிற்கிறார் என்னலுமாம்.

பல்லாண்டு:- என்றது, இவ்வாறு மேன்மையுள்ள சங்கந்தானும், எண்ணிறந்த காலம் எம்பெருமானுக்குப் பரிவுடன் பணி செய்து கொண்டு வாழவேணுமென்று வாழ்த்தி நிற்பதைக் காட்டி நிற்கிறது.

குறிப்பு:—இவ்விரண்டு பாட்டுக்களையும், திருமந்திரம் என்று சொல்லப்படும் திருவஷ்டாக்ஷரத்தின் அர்த்தங்களை வெளியிடுகின்றனவாக, முன்னோர்கள், வ்யாக்யானங்களில் மொழிந்துள்ளார்கள். அவைகளிலும் விஸ்தாரமானபடிகளை அனுபவரஸிகர்களான அறிஞர்களிடம் அடிபணிந்து கேட்டு அகமகிழ ப்ராப்தம். மற்றும் இங்கு புலப்படும் பொருத்தமான ஓர் அனுபவ விசேஷத்தை இத்திருப்பல்லாண்டின் இறுதியில் அனுபவிப்போம். மேலும் இப்பாட்டுக்களில், மல்லாண்டதிண்டோள் என்று அஸுரனை நிரஸனம் பண்ணின பராக்கிரமத்தைப் பேசியபடியில், அவனுடைய வீரத்தன்மையான மற்றும் குணங்கள் பேசப்பட்டதாகவும், மணிவண்ணா என்பதாலும் உன் சேவடிசெவ்வி என்பதாலும், அவனுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதி குணங்களான கல்

யாண குணங்களெல்லாம் பேசப்பட்டதாகவும், வடிவாய்............ மங்கையும் என்பதால் மற்றுமுள்ள மஹிஷிகளையெல்லாம் பேசப்பட்டதாகவும், அப்படியே, சுடராழியும், அப்பாஞ்சசன்னியமும், என்பவைகளால், பின்னும், அவன் கொண்டிருக்கிற திவ்யாயுதங்களெல்லாம் பேசப்பட்டதாகவும், ஆக எண்ணிறந்த கல்யாணகுணங்களையுடையனாய், ஸ்ரீ, பூமி, நீளாதி நாயகனாய், சங்க, சக்ர கதா சார்ங்காதி, திவ்யாயுதங்களையுடையனான, ஸ்ரீமந்நாராயணனுக்குப் பல்லாண்டு, பாடப்பட்டதென அறிக.

அப்படியே, அடியோமோடும், என்கிற முதற்பாதத்தால், ஸ்வோஜ்ஜீவநேச்சாயதிதேஸ்வ ஸத்தாயாம் ஸ்ப்ருஹாயதி | ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வாபாவ்யஞ்சஸதாஸ்மர (உனக்கு உயர்ந்த ஜீவனத்தில் எண்ணமிருந்தாலும், உன்னுடைய ஸத்தையில் ஆசையிருந்தாலும், ஆத்மாவிற்கு அடிமைத்தனமுள்ளதென்பதையும், எம்பெருமானுக்கு யஜமானத்தன்மையுள்ளதென்பதையும், இது எப்பொழுதும் உள்ளதென்பதையும் எப்பொழுதும் நினை) என்கிறபடியுள்ள ப்ரமாணங்களால் காட்டப்படுகிறபடி, எம்பெருமானை விட்டுப்பிரியாது சேதனர்களெல்லாம் அவனுக்கு அடிமை செய்துகொண்டு அம்மகிழ்ச்சியுடனேயே வாழ்ந்திருக்கத்தக்கதென்பதுவும் வெளிப்படுத்தப்பட்டதாகவுமாகிறது. (2)

வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்
வந்து மண்ணும் மணமுங்கொண்மின்*
கூழாட் பட்டு நின்றீர்களை யெங்கள்
குழுவினிற் புகுதலொட்டோம்*
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்
இராக்கதர் வாழ்* இலங்கை
பாழாளாகப் படைபொருதானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே* (3)

வாழ்	நல்வாழ்வையுண்டாக்கத்தக்க
ஆள்	அடிமைசெய்வதில்
பட்டு	ஆசைப்பட்டு

கீழ்ப்பாசுரத்தில் ஸம்ஸாரிகளைப்பார்த்து உடம்பு விழுமளவும் திருமாலை ஏத்துமின்: என்றார். அவர்கள் ஆழ்வார் பாசுரத்தை செவியில் வாங்காமலேயே விஷயங்களிலேயே ஆசையுள்ளவர்களா யிருந்தார்கள். அதுகண்டு ஆழ்வார், அந்த ஸம்ஸாரிகளுக்கு உபதே சிப்பது வீண் என்று நினைத்துத் தமது நெஞ்சுக்கு உபதேசிக்கிறா ரிப்பாட்டில்.

நன்று:—என்னுடைய நெஞ்சமே! உனக்கொன்று சொல்லு கேன் கேள்; நீ, வியாதிகள், கிழத்தன்மை, மரணம் முதலியவை களை அடியோடு தொலைத்து கைவல்யத்தை அடைந்தாலும் சரி; அல்லது நான்கு யுகங்களுடன் கூடின நீண்டகாலம் வாழப்பெற்று இவ்வுலகங்களையெல்லாம் ஆட்சிசெய்வதாகிற ஐச்வர்யத்தைப் பெற் றாலும் சரி; அல்லது இவையிரண்டையும் அடைந்தாலும் சரி; திரு வாழியைக் கையில் தரித்த பெருமானிடம் அன்பை மாத்திரம் நீ விட்டுவிடாதே; உன்னை இவ்விஷயத்திற்காக நான் மிகவும் கெஞ் சிக்கேட்டுக்கொள்கிறேன். நீ அவைகளில் கண்வைக்காமல் திரு மாலையே வேண்டிக்கொண்டிரு என்கிறார்.

ஜீவாத்மாவை அனுபவிப்பதாகிற கைவல்யஸுகம் உயர்ந்ததே யாயினும் பகவதனுபவத்தைக் காட்டிலும் அல்பமாகையால் அதிலே ஆசையை வைக்கக்கூடாது. ஐச்வர்யம் என்பது மிகவும் அதிக மாகக் கிடைத்தால் ஸுகத்தைக் கொடுப்பதாயிருந்தாலும் அது அழியும் தன்மையுள்ளதாயிருப்பதால் மீண்டும் துயரத்தையே விளை விக்கிறது. ஆதலால் ஐச்வர்யத்துக்கு ஆசைப்படுவதும் தகுதியல்ல; ஐச்வர்யகைவல்யங்கள் உனக்குக் கிடைத்தபொழுது "வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்" என்றபடி அவைகளை உதைத்துத் தள்ளி திருமாலிடம் சென்ற சிந்தையாயிரு என்கிறார்.

நன்று:—ஐச்வர்யகைவல்யங்களில் எந்ததோஷங்களை வேதாந்தி கள் சொல்லுகிறார்களோ அவைகளை விலக்கி, ஐச்வர்ய கைவல் யங்களை நல்லதாகப்பண்ணி உனக்குக் கொடுத்தாலும் நீ அவைகளை வேண்டாதே. ஏனெனில் அவ்வீச்வரனல்லாத பொருள்கள் விட வேண்டியவைகள்; அவன் ஸ்வீகரிக்கவேண்டியவன்; மற்றவை கள் எப்படியிருப்பினும் அவைகளில் சிந்தையை வைக்காமலும் திருமாலை விடாமலும் இரு என்கிறார்.

ஆழி நெஞ்சமே:—நீ எப்பொழுதும் பகவத்குணாநுபவத்திலேயே ஆழ்ந்துகிடக்கிறாய்; உனக்கு நான் சொல்லவேண்டியதில்லை. ஆகிலும் ஐச்வர்ய கைவல்யங்கள் பெருமானை மறக்கச் செய்யும்படி கொழுப்பை உண்டுபண்ணுமியல்புள்ளவைகள்: ஆதலால் அக்காலங்களிலும் நீ எம்பெருமானை மறவாமலிரு என்று உணர்த்தினாரென்பது தோன்றும்.

அடலாழிகொண்டான்:—நம்முடைய விரோதிகளைப் போக்குவதற்கென்றே எப்பொழுதும் திருவாழியைக் கையிலே தரித்தவன். ஆச்ரித விரோதிகளை யழிக்கக்கருதினால் ஆயுதசாலைக்குப் போய் ஆயுதங்களை எடுத்துவர காலதாமதமாகுமோ என்று கருதி கையிலேயே ஆயுதங்களை தரித்திருப்பவன். ஆதலால் அவனை விடாதே கொள் என்று உபதேசித்தார்.

அன்பாழி யானை யணுகென்னும் நாவவன்றன்
பண்பாழித் தோள்பரவி யேத்தென்னும்—முன்பூழி
காணானைக் காணென்னும் கண் செவி கேளென்னும்
பூணாரம் பூண்டான் புகழ் (72)

அன்பு	பகவத் பக்தியே வடிவமாகக் கொண்ட என் மனமானது
ஆழியானை	திருவாழியையுடைய பெருமானை
அணுகு- என்னும்	"ஸமீபத்தில் சென்று அநுபவிப்பாய் என்று" எனக்குச் சொல்லுகிறது
நா	என்னுடைய நாக்கானது
அவன் தன்	அந்த ஸ்வாமியினுடைய
பண்பு ஆழி தோள்	லாவண்ய ஸமுத்ரமான திருத்தோள்களை
பரவி ஏத்து என்னும்	"பரக்கப்பேசித்துதி செய்" என்று சொல்லுகிறது.
கண்	எனது கண்கள்
முன்பு ஊழி காணானை	முந்தி நாம் அபராதியாய்ப்போந்த காலத்தை மனத்தால் நினையாத பெருமானை
காண் என்னும்	பார் என்று சொல்லுகிறது.
செவி	எனது காதுகள்
பூண் ஆரம் பூண்டான் புகழ்	ஹாரம் முதலிய ஆபரணங்களை அணிந்தவனுடைய குணங்களை
கேள் என்னும்	'கேள்' என்று என்னைத் தூண்டுகிறது.

கீழே தனது நெஞ்சைக் குறித்து உபதேசம் செய்தார். தான் உபதேசிப்பதற்கு முன்பே தன்னுடைய கரணங்கள் அவ்வீச்வரனிடம் ஆழ்ந்து கிடந்தன. அவைகளைப் பார்த்தவுடன் அவைகள் தனக்கு உபதேசம் செய்வது போல் தோன்றிற்று. அதை அருளிச் செய்கிறு ரிப்பாட்டில்.

அன்பு:- என்னுடைய மனம் ஆழியானையே கிட்டி நெருங்கி அநுபவிக்கவேண்டும் என்று எனக்கு உபதேசிக்கிறது: என்னுடைய நாக்கு மிகுந்த அழகுவாய்ந்த திருத்தோள்களையுடைய அவனை எப்பொழுதும் துதித்துக் கொண்டிரு என்று எனக்குச் சொல்லுகிறது: எனது கண்கள் நாம் குற்றவாளியாயிருந்த நாட்களையே மறந்திருக்கிற பகவானைப் பார் என்று சொல்லுகின்றன: என் காதுகள் பல திருவாபரணங்களை அணிந்துகொண்டிருக்கிற பெருமானுடைய குணங்களையே கேட்டுக்கொண்டிரு என்று எனக்குச் சொல்லுகின்றன: நான் அவைகளுக்கு உபதேசிக்க வேண்டியது போக அவைகள் எனக்கு உபதேசிக்கின்றன என்று ஸந்தோஷிக்கிறுர்.

அன்பு:- தன் நெஞ்சு பெருமானிடம் அளவிறந்த அன்புகொண்டிருந்த படியால் தனது நெஞ்சை நெஞ்சு என்று சொல்லாமல் "அன்பு" என்ற சொல்லாலேயே சொல்லுகிறுர்.

இப்பாட்டில் முதல்இரண்டடிகளில் தன் நெஞ்சும் நாக்கும் தனக்கு உபதேசித்தமையை வரைந்தார். நெஞ்சும் நாவும் உபதேசித்தபின் ஆழ்வார் அவைகளைக் குறித்து, நான் இன்றுமுதல் நீங்கள் சொன்னபடி செய்கிறேன்: ஆனுல் கீழ் நாட்களில் நான் செய்த குற்றங்களை நினைத்து என்னை தண்டிக்க மாட்டானே அப்பரம புருஷன்? என்று ஒரு கேள்வி கேட்கிறுர். அவைகளைக் கேட்டவுடன் தன்னுடைய கண், நெஞ்சும் நாவும் சொன்னபடி நீ அவனைத் துதி செய்வாயாக; நீ அவன் விஷயத்தில் சிறிது இறங்கி நின்றுல் நீ முன்பு செய்த குற்றங்களே அவன் கண்ணில் படாது: நீ குற்றம் செய்த சென்ற அநாதிகாலத்தையே மறந்து விடுவன்: காலத்தையே மறக்குங்கால் உனது குற்றம் தென்பட நியாயமே இல்லை: உன்னைத் தேடிக்கொண்டு அவன் உன் எதிரே வருவான்: அப்பொழுது நீ அவனை ஸேவித்துக் கொண்டேயிரு என்று பதில்

சொல்லுகிறது. உடனே ஆழ்வார் அக்கண்ணைப் பார்த்து அவன் எதிரே வருவான் என்று நீ சொன்னது மெய்தான். அப்படியிருந்தா லும் அவன் என்னை அடிப்பதற்கு வந்தால் நான் என்ன செய்வது என்றார். அதற்கு கண் 'காண்' என்று சொல்லிற்று. அடிக்க வருகிறவனையும் அணைக்க வருகிறவனையும் நேரில் பார்த்தால் நன்கு தெரியும். ஆகையால் வரும்பொழுது அவனை கண்களால் ஸேவித் தால் உனக்கே தெரியுமென்று சொல்லுகிறது. ஆழ்வார் நீ சொன் னபடி அவன் என்னை அணைக்கும் எண்ணத்துடனேயே வரலாம். ஆனால் வந்து என்னைப் பார்த்ததும் என்னுடைய தாழ்மையை நினைத்து மீண்டும் தான் திரும்பிப்போனால் நான் என்ன செய்வது என்றார். அதற்குத் தன் செவி பூணாரம் பூண்டான் புகழ் கேள் என் னும். அவன் திரும்பிப்போனாலும் அவனுடைய குணங்களைக் காதால் கேட்டுக்கொண்டிரு என்றதாம், பூணாரம் என்பதால் அவன் திரும்பிப்போகும்பொழுது அவன் அணிந்துகொண்டிருக்கிற திருவாபரணங்கள் சப்திக்கும்; அந்த சப்தத்தைக் கேட்டுக்கொண் டேயிரு என்றதாம். ஆகையால் நாம் செய்யவேண்டியதைச் செய்வோமென்று தனது காணங்கள் உபதேசித்தன. இப்பாசுரங் களில் இழைக்கப்பட்ட பதங்களால் இப்படி ஒருஸம்பாஷணை நடந் ததுபோல் தோன்றுகிறது. பண்பு + ஆழி— தோள் = அழகுக்குக் கடலாயிருக்கிற தோள்கள். அல்லது பண் + பாழி—தோள் = அழ கையும் பலத்தையும் உடைய தோள்கள்.

இப்பாட்டின் மூன்றாமடியால், ஒரு ஜீவன் எம்பெருமானை ஆச்ரயித்தால் பெருமான், அவன் இதற்குமுன்பு என்ன செய்தான்? பாபங்களைச் செய்தானா? புண்ணியங்களைச் செய்தானா? என்று யோசிப்பதே இல்லை. முன்காலத்தையே மறந்துவிடுகிறானென்கிற பொருள் தோன்றுகிறது.

புகழ்வாய் பழிப்பாய் நீ பூந்துழாயானை
இகழ்வாய் கருதுவாய் நெஞ்சே—திகழ்நீர்
கடலு மலையு மிருவிசும்பும் காற்றும்
உடலு முயிரு மேற்றான். (73)

நெஞ்சே	என் மனமே!
நீ	நீ
பூந்துழாயானை	அழகான திருத்துழாயை யணிந்த ஸ்வாமியை
புகழ்வாய்	ஸ்தோத்திரம் செய்தாலும் செய்;
பழிப்பாய்	நிந்தனை செய்தாலும் செய்;
இகழ்வாய்	அலக்ஷ்யம் பண்ணினாலும் பண்ணு;
கருதுவாய்	ஆதரித்தாலும் ஆதரித்திடு;
	(அந்த ஸர்வேச்வரனே)
திகழ்நீர்	ப்ரகாசிக்கிற தீர்த்தத்தையுடைய
கடலும்	ஸமுத்திரத்தையும்
மலையும்	பர்வதங்களையும்
இரு விசும்பும்	பரந்த ஆகாசத்தையும்
காற்றும்	வாயுவையும்
உடலும்	தேஹத்தையும்
உயிரும்	ஆத்மாவையும்
ஏற்றான்	தரித்துக்கொண்டிருப்பவன்.

கீழ்ப்பாசுரத்தில் தன் நெஞ்சு முதலிய கரணங்கள் பகவத்குணாநுபவத்தில் படிந்து கிடப்பதைப் பேசினார். பிறகு சற்று நேரம் ஆலோசித்துப் பார்த்தார். நம்முடைய நெஞ்சு இப்பொழுது போலவே எப்பொழுதும் பெருமானையே சிந்தித்துக் கொண்டிருக்கும் என்று சொல்லமுடியாது. மனம் சஞ்சலஸ்பாவமானது. காலையதினம் வேறு ஒருவஸ்துவை விரும்பினாலும் விரும்பும் என்று தீர்மானித்துக் கடைசியாக ஒருவார்த்தை சொல்லுகிறேன் கேள் என்று மீண்டும் தன் நெஞ்சுக்கு ஒரு வார்த்தை சொல்லுகிறார் இப்பாட்டில்.

புகழ்வாய்:— அழகான திருத்துழாய் மாலையை அணிந்த ஸர்வேச்வரன், ஜலத்தினால் நிறைந்த கடல்களையும், மலைகளையும், விசாலமான ஆகாசத்தையும், காற்றையும், பஞ்சபூதங்களால் செய்யப்பட்ட ஸகல சரீரங்களையும் அவைகளுள் நுழைந்திருக்கும் ஜீவாத்மாக்களையும் எப்பொழுதும் தரித்திருக்கிறான். அவன் இவை யெல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருப்பவன். அவன் தான் ஜகத்காரணமான பரம் பொருள் என்று என்னுடைய தீர்மானம். எனது நெஞ்சே நீ அந்த திருத்துழாய் மாலையணிந்த ஸர்வேச்வரனை ஸ்தோத்திரம் செய்து கொண்டு ஆதரித்திருந்தாலும் இரு; ராவணாதிகளைப்போல் அவனைப் பழித்துக் கொண்டு அலக்ஷ்யம் செய்து கொண்டிருந்தாலும் இரு. நீ புகழ்ந்தால் அவனுக்கு ஒரு மேன்மை உண்டாகப் போவ

இல்லை. நீ பழித்தால் அவனுக்கு ஒரு குறைவும் வரப்போகிறதில்லை. அவன் ஜகத்காரணமான புருஷோத்தமன் என்று என்னுடைய தீர்மானத்தைச் சொல்லிவிட்டேன். நீ செய்வன செய் என்று மத்யஸ்தன் சொல்வது போல் தன் நெஞ்சுக்கு உபதேசிக்கிறார்.

ஏற்றான் புள்ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு. (74)

ஏற்றான்	ரிஷபவாஹனனும்	நிழல்மணி வண்ணத்தான்	குளிர்ந்த நீலரத்னம் போன்ற நிறமுள்ளவனும்
எயில் எரித்தான்	முப்புரத்தை எரித்தவனும்	பூமகளான்	பூவில்பிறந்த திருமகளுக்கு வல்லபனும்
நீற்றான்	சாம்பலை பூசிக்கொண்டவனும்	நீண்முடியான்	உயர்ந்த கிரீடத்தை யுடையவனும்
கூறு ஒருபால் மங்கையான்	தனது உடம்பின் பாதியில் பார்வதியை தரிப்பவனும்	நீள்கழலான்	ஆச்ரிதரிருக்குமிடம்வரையில் நீண்டு செல்லும் திருவடிகளையுடையவனுமான விஷ்ணுவினுடைய
வார்சடையான்	நீண்ட சடையுடையவனும்	காப்பு	ரக்ஷணத்திலகப்பட்டவன்.
கங்கையான்	கங்கையைத் தலையில் தாங்கினவனுமான பரமசிவன்		
புள்ளூர்ந்தான்	கருடவாஹனனும்		
மார்வு இடந்தான்	இரணியனுடைய மார்வைப்பிளந்தவனும்		

ஜகத்காரணமாயும உலகிற்காதாரமாயுமிருப்பவன் துழாய் மாலையான் என்றார் கீழ்ப்பாட்டில். அப்படி ஜகத்காரணமானவன் ருத்ரனாகவிருந்தாலென்? என்று சிலர் வினவ, அவர்களுக்கு அப்படிப்பட்டவன் ஸ்ரீய: பதியான புருஷோத்தமன் தான் என்று இப்பாசுரத்தால் விடையளிக்கிறார்.

ஏற்றான்:— ரிஷபவாஹநனும், திருபுராஸுர ஸம்ஹாரம் செய்தவனும், சாம்பலை உடம்பில் பூசிக்கொண்டவனும், தன்பாதி உடம்பில் பார்வதி என்னும் மடந்தையைக் கொண்டவனும், தலை

யில் சடை பூண்டவனுமான ருத்ரன், கருடவாஹனனும், ஹிரண்யனைப் பிளந்தவனும், குளிர்ந்த நீல நிறத்தவனும், லக்ஷ்மிதேவியின் கணவனும், நீண்டகிரீடம் தரித்தவனும், நீண்ட திருவடிகளையுமுடையவனுமான நாராயணனுடைய ரக்ஷணத்தில் அகப்பட்டவன். நாராயணனுடைய ரக்ஷ்யவர்க்கத்தில் சேர்ந்தவன் என்பது கருத்து. இப்படி நாராயணன் பரன் என்பதையும், அரன் அவனுடைய ரக்ஷணத்திலகப்பட்டவன் என்பதையும் இப்பாசுரத்தில் இவ்விருவர்களுக்கும் இணைத்திருக்கும் அடைமொழிகளே நன்கு காட்டும். இருவருக்குமுள்ள வாசிதோன்றுவதற்கே இருவருக்குமிட்ட அடைமொழிகளை மாற்றி மாற்றி எழுதுகிறார்.

வாஹநம் ஒருவனுக்கு ரிஷபம்: மற்றவனுக்கு வேதமயனான கருடன். ஒருவன் தன்னையாச்ரயித்தவர்களுக்கிருப்பிடமான முப்புரத்தை எரித்தவன்: மற்றொருவன் ஆச்ரிதனுடைய விரோதியை அழித்தவன். ஒருவன் தன் உடம்பில் பஸ்மாவைப் பாவம் தொலைவதற்காகப் பூசிக்கொண்டவன்: மற்றொருவன் இயற்கையிலேயே குளிர்ந்த மணிவண்ணன்.

ஒருவன் மங்கையைத் தனக்காகத் தன்னுடம்பில் கொண்டு அர்த்தநாரீயானவன்: மற்றொருவன் ஜீவாத்மாக்களுக்குப் புருஷகாரமாகவிருக்கும் "அஸ்யேசாநா ஜகத:" என்கிற பிராட்டியை திருமார்பில் கொண்டவன். ஒருவன், தான் ஒரு தருமத்தைச் செய்தே மேன்மைபெற்றேன் என்பது தோன்றும்படி ஜடையை தரித்திருக்கிறான்: மற்றொருவன் ஆதிராஜ்ய ஸூசகமான கிரீடத்தை தரித்தவன். ஒருவன் தலையில் சுத்திக்காக கங்கை விழுகிறது: மற்றொருவன் ஆச்ரிதர்களை பரிசுத்தமாக்குவதற்கு அவர்களுள்ளளவளவும் நீண்டு செல்கிற கங்கை பயந்த திருவடியையுடையவன். நீங்களே யார் பரனென்று தேறித்தெளியுங்கோள் என்றபடி.

காப்புன்னை யுன்னக் கழியு மருவினைகள்
ஆப்புன்னை யுன்ன வவிழ்ந்தொழியும்—மூப்புன்னைச்
சிந்திப்பார்க் கில்லை திருமாலே நின்னடியை
வந்திப்பார் காண்பர் வழி. (75)

திருமாலே	திருமகள் நாதனே!
உன்னை உன்ன	உம்மை ரக்ஷகன் என்று நினைத்து தியானித்தால்
காப்பு	பிரதிபந்தகங்கள்
கழியும்	தொலையும்
உன்னை உன்ன	உன்னை தியானித்தால்
அருவினைகள்	கொடிய பாபங்களாகிற
ஆப்பு	பந்தமும்
அவிழ்ந்து ஒழியும்	அவிழ்ந்து நழுவிப் போம்
உன்னை சிந்திப்பார்க்கு	உன்னை நினைக்கிறவர்களுக்கு
மூப்பு இல்லை	கிழத்தன்மை முதலான ஆறு பாவவிகாரங்கள்கிடையாது
நின் அடியை	உன்திருவடிகளை
வந்திப்பார்	ஸேவிப்பவர்கள்
வழி	தேவயான மார்க்கத்தை
காண்பர்	பார்க்கிறார்கள்.

திருமாலைத் தெய்வமென்று தியானிப்பவர்களுக்கு ஸகல பிரதிபந்தகங்களும் விலகி, திவ்யலோகப்ராப்தி பூர்வகமாக பரமஸாம்யமாகிற மோக்ஷானந்தமும் கிடைக்கு மென்கிறார்.

காப்பு:– திருமாலே! உன்னை தியானித்துக் கொண்டிருந்தால் உன்னை யடைவதற்குத் தடங்கலாயிருக்கும் இடையூறுகளெல்லாம் விலகிப் போகும். அல்லது, காப்பு என்பதற்கு காவலாளர்கள் எனப்பொருள். பரமபுருஷன் ஜீவராசிகள் செய்யும் பாபங்களைத் தெரிந்து கொள்வதற்கு ஆதித்யன், சந்திரன், வாயு, அக்நி, த்யு, லோகம், பூமி, ஜலம், ஹ்ருதயம், யமன், பகல், இரவு, இரண்டு ஸந்த்யைகள், தர்மதேவதை, ஆக பதினன்கு ஸாக்ஷிகளை நியமித்திருக்கிறான். ஒருவன் இந்தப் பதினல்வர்களுள் ஒருவருக்காவது தெரியாமலிருக்கும்படி ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. இவர்கள் நாம் செய்யும் பாபங்களை எண்ணிக் கொண்டே யிருக்கிறார்கள். ஆகவே நாம் ஸர்வேச்வரனை தியானித்தால் நமக்குக் காவலாக நியமிக்கப்பட்டிருக்கும் பதினல்வர்களும் நம் வினைகளை எண்ணுவதற்கு முன் வரமாட்டார்கள் என்றபடி.

உன்னுடைய தியானத்தால் அருமையான கர்மங்களால் நேர்ந்திருக்கிற ஸம்ஸாரபந்தம் தானே அவிழ்ந்து போம்.

உன்னைச் சிந்திக்குமவர்களுக்கு, உளன் எனப்படும் தன்மை, பிறப்பது, மாறுவது, வளர்வது, குறைவது, இறப்பது முதலிய ஆறு பாவவிகாரங்கள் கிடையாது. அதாவது மீண்டும் சரீரஸம்பந்

தம் கிடையாதென்பதாம். உன் திருவடிகளை ஸேவிப்பவர்கள் உனக்கிருப்பிடமான நித்யமான பரமபதம் எனப்படும் உலகத்தை அடைவதற்கு மார்க்கமான அர்ச்சிராதி மார்க்கத்தைப் பார்க்கிறார்கள். மற்ற வுலகங்களுக்குச் செல்கிற மார்க்கங்கள் போல் இல்லாமல் பரமஸுகமான மார்க்கத்தைக் கண்டு போகிறார்கள் என்று திருமாலை வணங்குகிறவர்களுக்கு உண்டாகும் பிரயோஜனத்தைப் பேசினார்.

வழிநின்று நின்னைத் தொழுவார் வழுவா
மொழிநின்ற மூர்த்தியரே யாவர்—பழுதொன்றும்
வாராத வண்ணமே விண்கொடுக்கும் மண்ணளந்த
சீரான் திருவேங்கடம். (76)

வழி நின்று	பகவானை அடைய உபாயமான மார்க்கத்திலே நிலையாய் நின்று
நின்னை	உன்னை
தொழுவார்	ஸேவிப்பவர்கள்
வழுவா	அழிவில்லாத
மொழி	சொற்களாகிற வேதத்தில்
நின்ற	சொல்லப்பட்ட
மூர்த்தியரே ஆவர்	ஸ்வரூப ஆவிர்பாவத்தைஉடையவராய் ஆவர்கள்.
மண்	பூமியை
அளந்த	அளந்துகொண்ட
சீரான்	கல்யாண குணங்களையுடைய ஸ்வாமி நித்யவாஸம் செய்கிற
திருவேங்கடம்	திருவேங்கட மலையே
பழுது ஒன்றும் வாராத வண்ணமே	ஒருகுறைவும் வாராதபடி
விண் கொடுக்கும்	பரமபதத்தைக் கொடுக்கும்

எம்பெருமானுடைய ஸம்பந்தத்தைப் பெற்ற திருவேங்கடமே மோக்ஷத்தைக் கொடுக்கவல்லதாயிருக்க, அவனையே தொழுமவர்களுக்கு அவன் மோக்ஷத்தைக் கொடுப்பதில் ஸந்தேஹமுண்டோ? என்கிறார்.

வழி நின்று:—வேதங்களில் சொல்லப்பட்ட பக்திமார்க்கத்தில் நிலையாய்நின்று உன்னைத்தொழுகிறவர்கள், வேதங்களில் சொல்லப்பட்ட தன் ஸ்வரூபத்தின் ஆவிர்பாவத்தை அடைவதாகிற நிலையைப் பெறுவார்கள். "ஏஷ ஸம்ப்ரஸாதோ அஸ்மாத் சரீ

ராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருப ஸம்பத்ய ஸ்வேந ரூபேண அபி நிஷ்பத்யதே'' இங்ஙனம் உபாஸநம் செய்கிற ஜீவன் இந்த சரீரத்தி லிருந்து எழுந்து மேலான ஜ்யோதிஸ்ஸான புருஷோத்தமனை அடைந்து தனக்குச் சொந்தமான ஸ்வரூபாவிர்பாவத்தை அடைகி றான். ஜீவனிடத்தில் கர்மாவினால் சுருக்கப்பட்டிருக்கிற ஞானம் ஆனந்தம் முதலியகுணங்கள் அர்ச்சிராதி மார்க்கத்தில் சென்று புரு ஷோத்தமனை அடைந்து மலர்ச்சியை அடைகின்றன. என்று உபநிஷத்துக்களில் சொல்லியபடி முக்தனாகிறான். அதாவது, வேதங்களில் மோக்ஷத்தையடைந்த ஜீவன் எந்த ஸ்வரூபத்துடனி ருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அப்படியே உன்னை ஸேவி ப்பவர்கள், அபஹத பாப்மா என்று ஆரம்பித்துச் சொல்லப்பபட்ட எட்டு குணங்களுடைய ஆவிர்பாவத்தையடைந்து, நித்யாநந்த பரித னாய் நிற்கிறான். இவ்விஷயத்தில் ஸம்சயமே இல்லை. ஏனெனில் உனக்கு இருப்பிடமான திருவேங்கடமலையே ஒரு குறைவும் வாரா தபடி பரமபதத்தைக்கொடுக்கிறது. உன்னுடைய ஸம்பந்தம் பெற்ற ஒரு அசேதனமானமலை மோக்ஷத்தை யாவருக்கும் அளிக் குமானால், நீ அதை கொடுப்பதில் ஐயமுண்டோ? என்று அப்பெரு மானைப்பார்த்து அவனுடைய உபகாரத்தைப்பேசினார்.

வழுவா மொழி:— குற்றங்களில்லாத வேதம். ஒருவனால் செய்யப்படாமல் பகவானைப்போல் நித்யமாயிருப்பதால் தோஷங் களில்லாத மறை என்றபடி.

''பழுதொன்றும் வாராதவண்ணம்'' இரண்டு விபூதிகளோடும் கூடிய ப்ரஹ்மத்தை அனுபவிப்பதில் கொஞ்சம்கூடக் குறைவில்லாத படி பரிபூர்ணப்ரஹ்மாநுபவத்தைக் கொடுக்கும் என்றபடி.

மண்ணளந்த சீரான்''—உலகளந்த நற்குணங்கள் நிறைந்த ஸ்ரீநிவாஸன்.

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும், அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும் - நான்
[கிடத்தும்
நின்றானிருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாமிடர். (77)

வேங்கடமும்	வடக்குத் திருமலையும்
விண்ணகரும்	ஸ்ரீ வைகுண்டமும்
வெஃகாவும்	திருவெஃகாவும்
அஃகாத	அழகுமாறாத
பூங்கிடங்கின்	புஷ்பங்களையுடைய அகழையுடைய
நீள்	விசாலமான
கோவல்	திருக்கோவலூரென்கிற
பொன்னகரும்	அழகான திருப்பதியும்
நான்கு இடத்தும்	ஆகிய விந்த நான்கு திவ்ய தேசங்களிலும்
நின்றான்	(முறையே) நின்றருளினான்
இருந்தான்	வீற்றிருந்தான்
கிடந்தான்	சயனித்திருந்தான்
நடந்தான்	அளந்து சென்றான்
என்றால்	என்று சொன்னாலே
இடர்	துக்கங்கள் எல்லாம்
கெடுமாம்	ஓடிப்போய்விடும்.

திருவேங்கடம் முதலிய பல திவ்யதேசங்கள் இப்பூமியிலிருப்பதால் ஸம்ஸாரிகள் அந்தந்த திவ்யதேசங்களில் எம்பெருமானுடைய திருவிளையாடல்களைச் சொன்னால் எளிதாக முக்திபெறலாமென்கிறாரிப்பாட்டில்.

வேங்கடமும்:— ஸ்ரீய: பதியான நாராயணன் திருவேங்கடமலையில் நின்ற திருக்கோலத்துடனிருக்கிறான். விண்ணகர் என்கிற ஸ்ரீவைகுண்டத்தில் உட்கார்ந்திருக்கிறான். திருவெ: கா என்கிற திவ்யதேசத்தில் படுத்திருக்கிறான். திருக்கோவலூரில் அவன் (உலகளந்த திருமேனியாதலால்) நடக்கிறான்; என்று ஒருவன் தன் வாயால் அவனையும் அவனுகந்தருளிய நிலங்களையும் பேசினால், அவனுடைய துயரங்களெல்லாம் தொலைந்துபோம்: மோக்ஷானந்தத்தை அடைவன் என்றபடி. ஆழ்வார்கள் மங்களாசாஸநம் செய்த நூற்றெட்டுத் திருப்பதிகளில் பரமபதமும் ஒன்று. ஆகையால் மற்றத் திருப்பதிகளோடு விண்ணகரையும் சேர்த்துச் சொன்னபடி. பிரகிருதிக்கப்பால் இருக்கிற விண்ணகரை, நம்மால் கண்டனுபவிக்கப்படுகிற திருவேங்கடம் முதலிய திவ்ய தேசங்களோடு சேர்த்து அனுஸந்திப்பதற்குக் காரணம், அவன் பரமபதத்தில் போலவே இப்புவியிலுள்ள திவ்யதேசங்களிலும் உகந்து வஸிக்கிறானென்பது பற்றியே.

நின்றானிருந்தான்:— அவன் நின்றதையும், கிடந்ததையும், இருந்ததையும், நடந்ததையும் பேசினால் நாம் நின்றும் இருந்தும்

கிடந்தும் நடந்தும் செய்த பாபங்களெல்லாம் நசித்துப் போகும். நம்மால் செய்யப்பட்ட பாபங்களனைத்தும் அழிந்துபோம் என்று தோன்றுகிறது.

இடரார் படுவா ரெழு நெஞ்சே, வேழம்
தொடர்வான் கொடுமுதலை சூழ்ந்த - படமுடைய
பைந்நாகப் பள்ளியான் பாதமே கைதொழுதும்
கொய்ந்நாகப் பூம்போது கொண்டு. (78)

நெஞ்சே	என் நெஞ்சமே
வேழம் தொடர்	கஜேந்திராழ்வானைத் தொடர்ந்து பிடித்த
வான்	பெரிய
கொடு முதலை	கொடுமைநிறைந்த முதலையை
சூழ்ந்த	கொன்றவனும்
படம் உடைய	படங்களை உடைய
பை நாகம்	பரந்த திருவனந்தாழ்வானை
பள்ளியான்	படுக்கையாகவுடையவனுமான பெருமானுடைய
பாதம் ஏ	திருவடிகளையே
கொய் நாகம் பூ போது கொண்டு	பறிக்கப்பட்ட புன்னைமரத்தின் அழகான புஷ்பங்களைக் கொண்டு
கைதொழுதும்	தொழுவோம்
எழு	எழுந்திரு (உயர்வை அடை).
இடர்	துக்கத்தை
ஆர்	எவர்
படுவார்	அநுபவிப்பார், பார்ப்போம், நான் அநுபவிக்கப் போவதில்லை

இடர்:- நாம் துயரங்களில் அகப்பட்டால் என் செய்யவாவது என்று வருந்திய தன் நெஞ்சைத் தேற்றுகிறார். பொய்கையில் பூக்கொய்வதற்கென்று இறங்கின கஜேந்திரனைப் பிடித்து ஹிம்ஸித்த முதலையை முடித்தவனும், விஷத்துடன் கூடின பரந்த படங்களையுடைய வனந்தன்மேல் பள்ளி கொண்டவனுமான பரமனுடைய திருவடிகளில் நல்ல நாகமலர்களைக் கொண்டு பூஜை செய்வோம். எழுந்துவா நெஞ்சே! நம்பக்கல் துன்பங்கள் அணுகா. துன்பங்கள், நம்மிடம் நெருங்கினால் கஜேந்திரனைப் பிடித்த முதலை பட்டபாடு படும். நமக்குத் துன்பங்கள் வாரா. நம்மைப் பிடித்த துன்பங்களுக்குத்தான் துன்பங்கள் வரும். ஆதலால் எழுந்துவா; என்று நெஞ்சை அழைக்கிறார்.

நாகப்பூம்போது:— இவ்வாழ்வார் காட்டிலேயே விசேஷமாக வஸித்துப் போது போக்கினபடியால் காட்டில் அதிகமாகக்கிடைக்கும் புஷ்பங்களுள் ஒன்றாகிய புன்னாக புஷ்பத்தால் பூஜை செய்யலாம் என்றார். உயர்ந்த புஷ்பங்களை தேடிச் செல்லவேண்டாம். அகப்பட்ட புஷ்பங்களைக் கொண்டே ஆராதிக்கலாமென்றபடி.

கொண்டானை யல்லால் கொடுத்தாரை யார் பழிப்பார்
மண்தா வெனவிரந்து மாவலியை - ஒண்தாரை
நீரங்கை தோய நிமிர்ந்திலையே நீள்விசும்பி
லாரங்கை தோய வடுத்து. (79)

மண்தா என	மூன்றடி பூமியைக் கொடு என்று
மாவலியை	மஹாபலியை
இரந்து	யாசித்து
(அவனும் கொடுத்தேன் என்ன)	
ஒண் தாரை நீர்	அழகான தாரையான ஜலம்
அம்கை	தன்னுடை அழகான கையில்
தோய	விழுந்து தோய்ந்த வளவில்
நீள் விசும்பிலார்	விசாலமான ஆகாசத்தில் வஸிக்கிற தேவர்களுடைய
அம் கை	அழகான கைகள்
தோய	தோய்ந்து திருவடி விளக்கும்படி
அடுத்து நிமிர்ந்திலையே	ஓங்கி வளரவில்லையோ
கொண்டானை	இப்படித்தன் வஸ்துவைப் பெறுவதற்கு மாறுவேடம் பூண்டு தன்னதாக்கிக் கொண்ட ஸ்வாமியை
அல்லால்	பழிக்கிறார்களே யல்லாது
கொடுத்தாரை	தனக்கு ஸொந்தமில்லாத பொருளைக் கொடுத்த மாவலியை
யார் பழிப்பார்	பழிப்பவர்கள் யார்?

ஒருவரும் பழிக்கமாட்டார்கள் இது என்ன நியாயம் என்றபடி.

தன்னை ஆச்ரயித்தவர்களைக் காப்பாற்றுவதற்காக தன் ஸ்வரூபத்தை யழித்துக் கொண்டு அவன் உபகரிப்பதைப் பேசுகிறார்.

கொண்டானை:— இந்த ஜகத்தில் ஜனங்களுக்கு விபரீத புத்தியே நடையாடுகிறது போலும், குணங்கள் தோஷங்களாகவே தென்படுகின்றன. தோஷங்கள் குணங்களாகவே தென்படுகின்றன. இது என்ன ஸம்ஸாரத்தின் கொடுமை! ஸ்ரீய: பதியான

நாராயணனுடைய பொருளான உலகைத் தன்னதென்று அஹங்கா ரத்தால் அபிமானித்திருந்த மஹாபலியினிடம் தேவர்களுக்காக பக வான் வாமனனுய் வந்து, யாகசாலையில் சென்று, மூவடி மண்ணி ரந்தபின், பெரிய வடிவெடுத்து உலகங்களனைத்தையும் அளந்து சரா சரங்களைத் தன்னதாக்கிக்கொண்டான், என்கிற வரலாற்றை எல்லா ரும் கேட்டிருக்கிறுர்கள். கேட்டதும் அப்பகவனையே மஹாபலி யை சிறிய திருவடியால் மூவடி கேட்டுப் பெரிய வடியால் அளந் தான்: தன் ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டுவந்தான். ஏமாற் றுகிற ஸ்வபாவமுள்ளவன்; தனக்குத் தானம் கொடுத்தவின மாவலியைத் தன் தாளால் பாதாளத்தில் அழுத்தினுன். ஆகையால் க்ருதக்நன்" என்று பலவாருகப் பழிக்கிறுர்கள். தானம் கொடு த்த மாவலியை யார் பழிக்கிறுர்கள். பெருமானுக்குரியதான புவந ங்களையெல்லாம் தன்னுடையதென்று நினைத்தானே: அஹங்காரி. பெருமானுடைய பொருளைத் திருடிக்கொண்டவன், என்றும் யாரா வது சொல்கிறுர்களா? இது என்ன அநியாயம்! உலகத்தார்களுக்கு தோஷங்களெல்லாம் குணங்களாகத் தோன்றுகின்றனவே. இரா வணன் சிசுபாலன் முதலியவர்களைப்போல் மஹாபலியையும் வதை க்கவேண்டியதாயிருக்க அவனிடமுள்ள ஔதார்யம் என்ற குணத் தை மிகவும் மெச்சி, தன்னுடைய பரஸ்வரூபத்தையும் அழியும்படி மாற்றி உலகிலுள்ள யாசகர்களைப்போல் வந்து, உலகங்களெல்லாம் மஹாபலியின் நினைவின் படியே அவனதாகவே வைத்து யாசித்து, உலகங்களை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு, அவன் தலையிலேயும் திருவடிகளையும் வைத்தருளினவன் பரமஸ்லபன், பரமோபகார கன் சரணுகதரக்ஷகன் என்று புகழவேண்டியிருக்கப் பழிக்கிறுர் களே! இது என்ன உலகின் இயல்பு என்கிறுர்.

ஒண்தாரைநீர்:— பூமிதானம் கொடுப்பதற்காக மஹாபலி வார் த்த சுத்தமான ஜலம்.

அம்கை தோய நிமிர்ந்திலையே:—ஜலம் கையில் விழுந்தவுடனே யே வளர்ந்தான். சிறிதுநேரம்கூடத் தாமதிக்கவில்லை யென்பதாம்.

நீள் விசும்பிலார் அம்கைதோய:— பகவான் வாமநனுய் மண் ணிரந்து கையில் நீரேந்தியதும், மிகவும் விரைவாக வளர்ந்தார். கை

யில் மாவலி வார்த்த ஜலம் திருவடியில் விழுகிற பொழுதுக்குள்ளே மூவுலகையும் வ்யாபித்த வடிவமாய் நின்றான். உடனே விண்ணுலகிலுள்ள தேவர்கள் எல்லாம் மாவலி வார்த்த ஜலத்தினாலேயே திரிவிக்ரமனுடைய திருவடிகளைக் கழுவினார்கள் என்று தோன்றுகிறது.

அல்லது, நீள் விசும்பில் ஆரம் கைதோய:— தன் மார்பிலணிந்திருந்த முத்துமாலையும், தன் கைகளும் ஆகாசத்திலே தொடும்படியாக வளர்ந்தான் என்றும் பொருள் புகல்வதுண்டு.

அல்லது நீள் விசும்பிலார் அம்கைதோய:— விண்ணவர்கள் தன்னுடைய அழகிய திருத்தோள்களில் இடிக்கும் படியாக வளர்ந்தான் என்றும் சொல்லலாம்.

அடுத்த கடும் பகைஞற் காற்றேனென்றோடி
படுத்த பெரும்பாழி சூழ்ந்த—விடத்தரவை
வல்லாளன் கைக்கொடுத்த மாமேனி மாயவனுக்கு
அல்லாது மாவரோ ஆள். (80)

அடுத்த கடு பகைஞற்கு	நெருங்கின கொடுமையான சத்ருவான கருடனுக்கு	சூழ்ந்த	சுற்றிக்கொண்ட
ஆற்றேன்	நேரே நிற்க சக்தியற்றவனல்லேன்	விடத்து அரவை	விடமுள்ள ஸுமுகன் என்கிற ஸர்ப்பத்தை
என்று	என்று சொல்லிக்கொண்டு	வல்லாளன்கை கொடுத்த	பலமுள்ள கருடன் கையிலே அடைக்கலமென்று சொல்லிக்கொடுத்த
ஓடி	வேகமாய் ஓடிப்போய்	மாமேனி மாயவனுக்கு அல்லாதும்	உயர்ந்த திருமேனியையுடைய ஆச்சரிய சேஷ்டிதனை பெருமானைத்தவிர
படுத்த	பெருமான் பள்ளிகொள்ளுமாறு படுத்த	ஆள் ஆவரோ?	மற்ற தேவர்களுங்கு அடிமையாவர்களோ?
பெருபாழி	படுக்கையாகிய பெரிய ஆதிசேஷனை		

எம்பெருமானுடைய சரணாகதரக்ஷண ப்ரகாரத்தைப் பேசுகிறார்.

அடுத்த:— தேவலோகத்தில் தேவேந்திரனுடைய ஸாரதியான மாதலி யென்பவன் தன்னுடைய குணகேசி என்கிற பெண்ணுக்கு

விவாஹம் செய்விப்பதற்காகத் தகுந்த மாப்பிள்ளையைத் தேடப் புறப் பட்டு, பல லோகங்களுக்குச் சென்றுக் கடைசியாகப் பாதாள லோகத்தில் போகவதி என்கிற பட்டிணத்தைச் சேர்ந்து, அங்கு ஆர்யகன் என்கிறவனுடைய பேரனும் சிகுரன் என்பவனுடைய குமாரனுமான ஸுமுகன் என்கிற நாக குமாரனைக் கண்டு, அவனு டைய நற்குணங்களிலீடுபட்டு, அவனுக்குத் தன்புதல்வியை மணம் செய்விக்க ஆசைப்பட்டு அவனது பாட்டனுன ஆர்யகனிடம் தன் னுடைய எண்ணத்தை வெளியிட்டான். ஆர்யகனும், இவ்விஷயத் தில் எனக்கு ஆக்ஷேபமில்லை. ஆனுல் நாககுலத்திற்குப் பகைவனுன கருடன் இன்னும் ஒரு மாதத்திற்குள் என்னுடைய புதல்வனையும் பேரனையும் கொன்றுவிடுவதாகச் சபதம் செய்திருக்கிருன். கருட னுடைய சபதம் பொய்யாகாது. ஆதலால் இப்பொழுது விவாஹம் செய்வது தகுதியல்ல: என்று சொல்லவே மாதலி நான் ஸுமுகனை கருடனிடமிருந்து எப்படியாவது காப்பாற்றிக்கொள்கிறேன் என் றுசொல்லி விட்டு, ஸுமுகனையும் அழைத்துக் கொண்டு தேவலோ கம் சென்று உபேந்திரபகவானேடு கூடவிருந்த தேவேந்திரனிடம் சென்று இந்த ஸுமுகனுக்கு மரணம் வாராதபடி காத்தருள வேணு மென்று வேண்டினுன். உடனே உபேந்திர பகவான், இவனை அம் ருதம் சாப்பிடும்படி செய்தால் கருடனுல் துன்பம் நேராதபடி காக் கலாம் என்ருர். அது கேட்ட இந்திரன் கருடனுடைய வலிமை யை நினைத்து அஞ்சி அவனுக்கு அம்ருதத்தைக் கொடுக்காமல் தீர் க்காயுளாக இரு; என்று வரமளித்தான். அதைக்கேட்டு ஸந்தோ ஷமடைந்த மாதலி ஸுமுகனுக்குத் தன் புதல்வியை மணம் செய்வி த்துக் கவலையற்றிருந்தான். உடனே கருடனும் பாதாளலோகம் சென்று ஸுமுகனைக் காணுமல் மீண்டும் தேவலோகம் வந்து ஸுமுகன் வரம் பெற்ற செய்தியைக் கேட்டு இந்திரனிடம் மிகுந்த சினம் கொண்டு இந்திரனிடம் மிகவும் க்ரூரமான வார்த்தைகளை மொழியவே, ஸுமுகனும் பயந்து, உபேந்திரபகவானிடம் சென்று அவனுக்குப் படுக்கையாகவமர்ந்திருக்கும் ஆதிசேஷனுகிற கட்டி லின் காலைச் சுற்றிக்கொண்டு பெருமானைச் சரணம் புகுந்தான். அதை அறிந்த கருடனும் அவ்வுபேந்திரனிடம் சென்று என் இரை யைநான் உண்ணுதபடி நீ எப்படித் தடுக்கலாம். நான் தேவர் களனைவரினும் மிகுந்த வலிமை வாய்ந்த உன்னை என் சிறகுகளால்

அநாயாஸமாக வஹிக்கவில்லையா? உன்னை வஹிப்பதற்கு என்னைப் போன்ற பலசாலி எந்தலோகத்திலாவது அகப்படுவார்களா? நான் இல்லாவிடில் உன்னை வஹிப்பவர் யார்? எனக்கே விரோதம் செய்கிறாயே! என்று பலவாறாகப்பேச, உபேந்திரனும் கருடனே! என்னை வஹிக்க ஒருவருமே உலகில் கிடையாது. நீயும் என்னை வஹிக்கவில்லை. நான் எல்லாவுலகங்களையும் தரிப்பது போல உன்னையும் தூக்கிக் கொண்டு செல்கிறேன். நீ உன் வலிமையால் என்னை வஹிக்கிறாய் என்று கருதினால், இப்பொழுது என்னுடைய கைவிரலைத் தூக்கு பார்ப்போம் என்று சொல்லி, கருடனுடைய தோளில் தன் கையின் சுண்டுவிரலை வைத்தான். கருடனும் அதைத் தூக்கச் சக்தியற்றவனாய் மூர்ச்சை யடைந்து கீழே விழுந்தான். உடனே பகவான் கருடனுக்குச் சில லோகங்களைக் காண்பித்தார். அந்த லோகங்களில் கருடனைப்போலவே பல்லாயிரம் கருடன்கள் தென்பட்டன. உடனே கருடன் வெட்கமடைந்து பகவானிடம் வணக்கத்துடன் அபராதங்களைப் பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கப் பகவானும் கிருபைகூர்ந்து, ஸுமுகனை எடுத்து கருடனிடம் ஒப்புவித்து இவனுக்கு ஒருகேடும் வாராதபடி காப்பாற்றி வா என்று அடைக்கலமாய் வைத்தான். கருடனும் ஸுமுகனை அது முதல் தன் தோளிலே அணைத்துக் கொண்டு காப்பாற்றி வந்தான். பிறகு இருவரும் மிகவும் அன்புவாய்ந்த நண்பர்களா யிருந்தார்கள் என்ற வரலாறு இப்பாசுரத்தில் அநுஸந்திக்கவும்.

இப்படிப் பரிஹரிக்க முடியாத கருடன் போன்ற விரோதிகளிருப்பினும் சரணாகதனை அவ்விரோதியைக் கொண்டே ரக்ஷிப்பது என்ற குணம் வாய்ந்த ஸர்வேச்வரனை யல்லது மற்றதேவர்களை யாராக அடைவார்களோ? என்கிறார்.

ஸ்ரீ ராமனைச் சரணமடைந்த விபீஷணனை சேர்த்துக்கொள்ளக் கூடாதென்று ஸுக்ரீவன் தடுத்தான். ஸ்ரீராமன் அவனுக்கு ஸமாதானம் சொல்லி அந்த ஸுக்ரீவனையே விபீஷணனைத் தன்னிடம் அழைத்து வரும்படி ஏவினான், அவனும் அழைத்து வந்து அவனோடு நண்பனானன், அதுபோல் விரோதிகளையும் அநுகூலராக்கி ரக்ஷிப்பன் என்பதையும் கொள்க.

ஆளமர் வென்றி யடுகளத்து ளஞ்ஞான்று
வாளமர் வேண்டி வரைநட்டு—நீளரவைச்
சுற்றிக் கடைந்தான் பெயரன்றே, தொன்னரகைப்
பற்றிக் கடத்தும் படை. (81)

ஆள் அமர்	வீரர்கள் பொருந்தியிருக்கிற
வென்றி	ஜயத்தைக் கொடுக்கிற
அடுகளத்துள்	கொலை நடக்கிற யுத்தஸ்தலத்தில்
அஞ்ஞான்று	அசுரர்கள் தேவர்களை வெல்லகூடிய அக்காலத்தில்
	தேவர்களுக்கு ஜயத்தை விரும்பி அதற்காக
வாள் அமர் வேண்டி	மிகுந்த சிறப்பையுடைய யுத்தத்தை ஆசைப்பட்டு
வரைநட்டு	(அதற்காக) மந்தரமென்கிற மலையை மத்தாக நாட்டி
நீள் அரவை	நீண்ட வடிவையுடைய வாஸுகியென்னும் பாம்பை
சுற்றி	கயிருகச்சுற்றி
கடைந்தான்	க்ஷீரஸமுத்திரத்தை கடைந்தவனுடைய
பெயர்அன்றே	திருநாமமல்லவா?
பற்றி	பத்த ஜீவர்களைப் பிடித்துக்கொண்டு போய்
தொல் நரகை	அநாதியாகவந்திருக்கும் நரகத்தை
கடத்தும்	தாண்டும்படி செய்விக்கும்
படை	ஸாதனமான கருவி.

பிரயோஜனாந்தரங்களை விரும்பும் அதிகாரிகளுக்கும் அருள்புரியும் தன்மை இப்பாட்டில் சொல்லப்படுகிறது.

ஆளமர்:—துர்வாஸ முனிவரின் சாபத்தால் ஐச்வர்யத்தையிழந்த தேவர்களை அஸுரர்கள் அடித்து ஹிம்ஸைசெய்யவே, தேவர்கள் அஸுரர்களை ஜயிப்பதற்காகவும், தேவர்களுக்கு தீர்க்காயுளைக் கொடுப்பதற்காகவுமாகத் திருப்பாற்கடலில் மந்தரமலையை மத்தாக நாட்டி வாஸுகியென்கிற பாம்பைக் கடைகயிருக்கட்டித் தன் உடம்பு நோவக் கடைந்து தேவர்களுக்கு அம்ருதத்தையும் மதிப்பையும் ஆயுளையும் கொடுத்த பெருமாளுடைய திருநாமத்தைச் சொல்லுங்கோள், அத்திருநாமம் ஸம்ஸாரத்தில் அகப்பட்டிருக்கிற ஜீவன்களை வாரி எடுத்துக்கொண்டுபோய் பிரகிருதி மண்டலத்திற்கு

அப்பால் நித்யவிபூதியிலே கொண்டு சேர்க்கிறது. ஸம்ஸாரத்தைத் தாண்டுவதற்கு ஸாதனம், அம்ருத மதனம் செய்த பெருமாளுடைய திருநாமங்கள்; என்றார்.

படையாரும் வாள் கண்ணார் பாரசி நாள், பைம்பூம்
தொடையலோ டேந்திய தூபம்—இடையிடையின்
மீன்மாய மாசூணும் வேங்கடமே, மேலொருநாள்
மான்மாய வெய்தான் வரை. (82)

படை ஆரும்	வேலாயுதத்திற்கு ஸமமான	மாசூணும்	அழுக்கடையும்படி செய்கிற
வாள்கண்ணார்	ஒளிபொருந்திய கண்களையுடைய மாதர்கள்	வேங்கடமே	திருவேங்கடம் தான்
பாரசி நாள்	த்வாதசியன்றைக்கு	மேல்ஒருநாள்	முன்னொருகால் (இராமாவதாரகாலத்தில்
பை பூ தொடையலோடு	அழகான புஷ்பமாலைகளோடு	மான்	மாரீசனென்கிற மான்
ஏந்திய	ஏந்திக்கொண்டுவந்த	மாய	மடியும்படி
தூபம்	தூபமானது	எய்தான்	அம்புதொடுத்த பெருமானுடைய
இடை இடையில் மீன்	வானில் நடுவே தோன்றுகிற நக்ஷத்திரங்கள்	வரை	மலையாகும்
மாய	மறையும்படியாக		

பெண்களுள்படவனைவர்க்கு மாச்ரயிக்கும்படியான அவனுடைய ஸௌலப்ய குணம் பேசப்படுகிறது.

படையாரும்:— வேலாயுதம்போன்ற பிரகாசத்தையுடைய கண்களையுடைய மாதர்கள் துவாதசிதினத்தில் அழகான புஷ்பங்களையும் தூபத்தையும் கொண்டுவந்து வேங்கடநாதனை ஆராதிக்கிறார்கள். அம்மாதர்களேந்திவந்த தூபத்தின்புகை ஆகாசத்தில் பரவி நக்ஷத்திரங்களை மறைத்து ஆகாசத்தை அழுக்கடைந்ததாகச் செய்கிறது. திருமலையின் மேல் பூவும் புகையுமாய் காணப்படுகிறதேயல்லது ஆகாயமும் நக்ஷத்திரங்களும் தென்படவில்லை. அப்படிப்

பெண்களுக்கும் ஆச்ரயிக்கும்படிக் கீடாக, முன் இராமாவதாரத்தில் பிராட்டிக்காக மாரிசனுகிற மாயமானை மடியும்படி செய்தபெருமான் திருமலையில் நித்ய வாஸம் செய்கிருன். ஈச்வரன் தனக்கு வரும் கேட்டையும் மதியாமல் ஆச்ரிதர்களுக்குக் காரியம் செய்பவரென்றும் ஸர்வ ஸௌலபனென்றும் இப்பாட்டில் பேசப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் திருவேங்கடத்தை ஸேவித்து நிற்க, இங்கு பெண்களை மாத்திரம் சொன்னதற்கடி. அறிவில்லாதவர்கள் கூட திருமலைநாதனை ஸேவிக்கிருர்கள் என்று, அவனுடைய ஸர்வ ஸௌலபத்வத்தைக் காட்டுவதற்காக.

த்வாதசி என்னும் வடசொல் தமிழில் பாரசி என்று சிதைந்ததெனச் சிலர் சொல்லுவார்கள்.

பாரணைநாள்–பாரசிநாள் என்று சிதைந்ததெனச் சிலர் ஓதுவர்.

வரைகுடைதோள் காம்பாக ஆநிரை காத்து, ஆயர்
நிரைவிடையேழ் செற்றவாறென்னே—உரவுடைய
நீராழியுள் கிடந்து நேரா நிசாசரர்மேல்
பேராழி கொண்ட பிரான். (83)

உரவு உடைய	பலமுள்ளதான
நீர் ஆழியுள்	நீர்நிறைந்த கடலில்
கிடந்து	பள்ளிகொண்டு
நேரா	சத்ருவாய் வந்த
நிசாசரர்மேல்	மதுகைடபர்கள் என்னும் அசுரர்களின்மேல்
பேர் ஆழி கொண்ட	(அவர்களை அழிப்பதற்கு) பெரிய சக்ராயுதத்தை கையில் தரித்த
பிரான்	உபகாரகனே!
வரை	கோவர்த்தனகிரியை
குடை	குடையாகவும்
தோள்	தன் தோளை
காம்பாக	குடைக்காம்பாகவும் (செய்து)
ஆநிரை காத்து	பசுக்களின் திரளைக் காப்பாற்றி
ஆயர்	இடையர் வைத்திருந்த
நிரைவிடை ஏழ்	திரண்ட எருதுகள் ஏழையும்
செற்ற ஆறு	அழித்தவிதம்
என்னே	எங்ஙனம் தான்.

ஆச்ரிதர்களுக்காகத் தன்னையும் மறந்து காரியம் செய்யும் ஸ்வபாவம் இப்பாட்டில் எழுதப்படுகிறது.

வரைகுடை:— எம்பெருமான் ஸாதுக்களை ரக்ஷிப்பதற்காகவே அவதாரம் செய்கிறான். ஸாதுக்களுக்கு இடையூறுகள் செய்வதால் துஷ்டர்களை ஹிம்ஸிக்க வேண்டியதாய் வருகிறது. ஒரு ஸாதுவுக்கு ஒருவன் விருந்து அளிக்கிறான். அவன் உட்கார்ந்து உண்ணும் போது இலையை ஒரு நாய்வந்து இழுக்கிறது. அந்த நாயை அடிக்க வேண்டியதாய் நேர்ந்துவிடுகிறது. அதுபோல் ஸாதுக்களைக் காப்பாற்ற வேண்டித் துஷ்டர்களை அடக்கவேண்டியதாய் இருக்கிறது. அதற்காகத் திருவாழியாழ்வானை எப்பொழுதும் கையில் ஏந்திக்கொண்டிருக்கிறாய். நீ திருப்பாற்கடலில் கிடந்து, ப்ரஹ்மதேவனை அடித்து வேதங்களையபஹரித்துச் சென்ற மதுகைடபர்களை வதைக்கக் கருதி, படுத்திருந்தபடியே யிருந்து திருவாழியாழ்வானை அனுப்பி அவர்களை முடிக்கவில்லையா? அதுபோல் நீ ஆச்ரிதவிரோதிகளை அழிக்க நினைத்தால் உன்னுடைய திவ்யாயுதங்களை அனுப்பியோ; அல்லது உன்னுடைய ஸங்கல்பத்தினாலோ காரியத்தை ஸாதித்துக் கொள்ளலாமே! கோவர்த்தன மலைக்குச்செய்த பூஜையைப் பொறுக்காத தேவேந்திரன் திருவாய்ப்பாடியாரிடத்தில் கோபங்கொண்டு பெருமழையை ஏவி இடையர்கள், பசுக்கள், கன்றுகள், எல்லாருக்கும் துன்பத்தை விளைவிக்கவே, நீ உனது திருவாழியை அனுப்பி தேவேந்திரனைத் தடுக்கலாமே; நப்பின்னையின் விவாஹத்திற்கு இடையூறாக விருந்த ரிஷபங்களையும் திருவாழியால் கொல்லலாமே எதற்காக மலையைத்தூக்கினாய், எதற்காக நேரே சென்று ரிஷபங்களோடு சண்டை செய்தாய்? தன் உடம்பைக் கஷ்டப்படுத்திக் கொண்டு ஏன் இங்ஙனம் வேலை செய்கிறாய். சக்தியில்லாதவனன்றோ அங்ஙனம் உடம்பைக் கஷ்டப்படுத்திக் கொள்ளவேணுமென்று பெருமானைக் கேட்கிறார்.

இந்தக் கேள்வியால், எம்பெருமான் ஆச்ரிதர்களுக்காகக் காரியம் செய்கிறபொழுது தன்னையும் மறந்து தன் சக்தியையும் மறந்து திவ்யாயுதங்களையும் மறந்து, தானே நேரில் செய்யவேண்டுமென்று தோன்றுகிறது. தானே காரியம் செய்தால் த்ருப்தியா

யிருக்கிறது. வேறொருவனை அனுப்பினால் மனம் ஸமாதானத்தை அடைகிறதில்லை. இப்படித் தன்உடம்பைக் கஷ்டப்படுத்திக்கொண்டாவது காரியம் செய்யவேணுமென்னும்படியான கரைபுரண்ட ஸ்நேஹம் அடியார்களிடம் உளது என்று நாம் அறியவேண்டும்.

பிரானுன் பெருமை பிறராரறிவார்
உராயுலகளந்த நான்று—வராகத்
தெயிற்றளவு போதாவாறென்கொலோ, எந்தை
அடிக்களவு போந்தபடி (84)

பிரான்!	உபகாரகனே!	வராகத்து	வராஹரூபியான உன்னுடைய
உராய்	சிரமமில்லாமலே	எயிறு	கோரப்பல்லின்
உலகு	லோகங்களை	அளவு	ஏகதேசமாகிற வளவிற்கும்
அளந்த நான்று	அளந்த ஸமயத்தில்	போதா	போதாமலிருந்த
எந்தை	என் ஸ்வாமியான உனது	ஆறு	பிரகாரம்
அடிக்கு	திருப்பாதங்களுக்கு	என்கொலோ	எங்ஙனமோ!
அளவு போந்த	அளப்பதற்குச் சரியாயிருந்த	உன்பெருமை	உனதுமேன்மையை
படி	பூமியானது	பிறர் ஆர் அறிவார்	வேறு யார்தான் அறிவார்கள்? (அறிவார் யாருமில்லை).

ஆச்ரிதர்களுக்காகத் தன்னையுமறியாது பாடுபடுகிற ஸர்வேச்வரனுடைய பெருமை ஆராலும் அறியமுடியாது என்கிறார்.

பிரான்:– ஒரு நாள் நீ வாமனனாய் வந்து மண்ணிரந்து மிகவும் பெரியவடிவத்துடன் உலகங்களை அளக்கும்பொழுது உன்னுடைய திருவடிக்குள் அடங்கின இப்பூமியானது, மற்றொருகால் நீ வராஹரூபத்துடன் பாதாளலோகம் சென்று ஹிரண்யாக்ஷனைக் கொன்று திரும்பி வரும்பொழுது உன்னுடைய கோரப்பற்களின் அளவுடன் கூடக் காணப்படவில்லையே! மிகவும் சிறியதாய் இருந்ததே! ஆதலால் உனது பெருமையை ஆர் அறிவார்? உன்னாலும் அறியமுடி

யாதென்றே தோன்றுகிறது; என்று அவ்வீச்வரனிடம் விண்ணப்பம் செய்தார். இப்பாசுரத்தால் வராஹமூர்த்தியைக் காட்டிலும் திரிவிக்ரமன் சிறிய வடிவுள்ளவன் என்று கண்டு வராஹ பகவானுடைய பெருமையை உணரத்தகும்.

உராய் = "உலாவிக்கொண்டு" எனப் பொருள். சிறிதும் சிரமமின்றி உலகளந்தான் எனக்கொள்க. அல்லது உராய் = உரோசிக்கொண்டு. திருவடியைப் பூமியில் பொருந்தவைத்துக் கொண்டு அல்லது எல்லாப் பொருள்களையும் மேலே உறையும்படி எல்லாவற்றையும் தீண்டிக்கொண்டு உலகளந்தான்; என்பர்.

படி கண்டறியே பாம்பணையினான், புட்
கொடி கொண் டறிதியே கூறாய்—வடிவில்
பொறியைந்து முள்ளடக்கிப் போதொடு நீரேந்தி
நெறி நின்ற நெஞ்சமே நீ. (85)

நெஞ்சமே	எனது மனமே!	பாம்பணையினான்	அரவத்தைப் படுக்கையாகவுடையவனுடைய
பொறி ஐந்தும்	ஐந்துபுலன்களையும்	புள்கொடி	பக்ஷியாகிற த்வஜத்தை
வடிவில் உள் அடக்கி	(பட்டிமேயாமல்) சரீரத்திற்குள்ளே அடங்கச்செய்து	கண்டு	பார்த்து
போதோடு	புஷ்பங்களோடு	அறிதியே	அநுபவித்திருக்கிறாயோ?
நீர் ஏந்தி	தீர்த்தத்தையும் தரித்துக்கொண்டு	படி	(அல்லது) அவனது திருவுடம்பை
நெறி நின்ற	அவனை அடையும் வழியில் நின்றுகொண்டிருக்கிற	கண்டு	ஸேவித்து
நீ	நீ	அறிதியே	அறிந்திருக்கிறாயோ?
		கூறாய்	சொல்லு.

படிகண்டறிதியே:— கீழே பெருமானைப் பார்த்து உன் பெருமையை ஆர் அறிவார்; என்று கேட்கவே தனது நெஞ்சம் நான் அறிந்தேன் என்று சொல்லிற்று. உடனே ஆழ்வார் தன் நெஞ்சைக் கேட்கிறார். நெஞ்சமே! நீ பகவானை அறிந்தேனென்று எப்

படிச் சொல்லுகிறாய்? நீ மற்ற இந்திரியங்களை வெளியில் மேய வொட்டாமல் அடக்கி புஷ்பங்களையும் தீர்த்தத்தையும் எடுத்துக் கொண்டு அவனைத் தொழும்படியான ஆச்ரயணத்தில் ஈடுபட்டிருக் கிறாய் என்பது எனக்குத் தெரியும். இதைத்தவிர நீ அவனை எப் பொழுது ஸாக்ஷாத்கரித்தாய் சொல்லு. நீ ஸாக்ஷாத்கரித்திருக்கும் பக்ஷத்தில் அவன்திருவனந்தாழ்வான்மேல்பள்ளிகொண்டபடியைச் சொல்லு பார்ப்போம்: அல்லது அவன் பெரிய திருவடிமேல் ஏறி எழுந்தருளும் பிரகாரத்தைச் சொல்லு பார்ப்போம்: நீ அவனை அறிந்தேன் என்று சொல்லுகிறாயே! நீ அவனை எந்தப்பிரகாரமாகப் பார்த்தாய் என்று கேட்கிறார்.

இத்தால் இவ்வாழ்வாருக்குப் பெரிய திருவடிமேல் ஏறி எழுந்த ருளும் பெருமானை ஸேவிப்பதிலும் திருவனந்தாழ்வான் மேல் ஏறி யருளும் பெருமானை ஸேவிப்பதிலும் மிகுந்த ஆசையெனத் தெரி ந்து கொள்க.

நீயும் திருமகளும் நின்றாயால், குன்றெடுத்துப்
பாயும் பனி மறைத்த பண்பாளா—வாசல்
கடைகழியா வுள்புகாக் காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி யினி. (86)

குன்று	கோவர்த்தன பர்வ தத்தை	கழியா	போகாமலும்
எடுத்து	உயரே தூக்கி	உள்புகா	வீட்டிற்குள் நுழை யாமலும்
பாயும் பனி	மேலே விழுகிற மழையை	இடைகழியே	நடுவிடமான இடை கழியையே (ரேழி யையே)
மறைத்த	தடுத்த	பற்றி	விரும்பி
பண்பாளா!	குண முள்ளவனே!	நீயும் திருமக ளும்	நீயும் பிராட்டியு மாக
காமர் பூ கோவல்	ஆசைப்படும்படி அழகுவாய்ந்த திரு க்கோவலூரில்	இனி	இப்போது
வாசல் கடை	வீட்டுத் திருவாச லுக்கு வெளியில்	நின்றாய்	நின்றருளினாய்
		ஆல்	ஆச்சரியம்

ஸ்ரீ:

ஸ்ரீ பராங்குச பக்த ஸபை

விண்ணப்பம்.

ஆழ்வார்கள் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே நம்பி இந்த ஸபையாரால் பிரசுரிக்கப்பட்டுவரும் இந்த ஸஞ்சிகைக்கு ஆஸ்திகர்களின் அன்புமிக்க அனுக்கிரஹத்தை விரும்புகிறேம். இந்த ஸஞ்சிகையில் ஒரு பாதிபாகத்தில் 'பொதுத்தனியன்கள்' தொடக்கமான முதலாயிரத்தின் வியாக்கியானமும், மற்றெரு பாகத்தில் 'முதல் திருவந்தாதி' முதல் இயற்பாவின் வியாக்கியான மும் எளியநடையில் எழுதப்படுகின்றன. ஆங்காங்கு பாசுரங்களில் தொகுக்கப்பட்டிருக்கும் இதிஹாஸ புராணக்கதைகளும் சுருக்கமாக வரையப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருதமிழ்மாதத்தின் விசாகநக்ஷத்திரத்தில் இது வெளியாகும். இந்த ஸஞ்சிகை சாச்வதமாய் நடக்க வேண்டியதற்காக யாவரும் போஷகர்களாய் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேம். ஒரேதடவையாக ரூ. 35ம் மேல்பட்டும் உபகரிப்பவர்கள் முதல் வகுப்பு போஷகர்கள். அவர்களுக்கு இந்த ஸபையாரால் வெளியிடப்படும் ஸஞ்சிகைகள் எல்லாம் எவ்வருஷமும் ஸபாவின் சிலவிலேயே அனுப்பப்படும். வருஷம் ஒன்றுக்கு ரூ. 5 உபகரிப்பவர்கள் இரண்டாவது வகுப்பு போஷகர்கள். அவர்களுக்கு ஸபாவின் சிலவிலேயே அந்த வருஷ ஸஞ்சிகைகள் அனுப்பப்படும். வருஷம் ஒன்றுக்கு ரூ. 3 கொடுப்பவரும் அல்லது மாதம் ஒன்றுக்கு அணு 4 கொடுப்பவரும் சந்தாதார்கள். (அவர்களுக்கு தபால் சிலவு வேறு.) ஆஸ்திகர்களனைவரும் இக்கைங்கரியம் இடையூரின்றி நடைபெறுமாறு ஆசீர்வதிக்கவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேம்.

T. R. அனந்தாச்சாரியார்,
ஸபைகாரியதரிசி.

Copies can be had of and communications are to be addressed to:— **K. Varadachariar, B.A., B.L., Vakil Pachayappa Mudali Street, Kumbakonam.**

or

The Secretary,
Sri Parankusa Baktha Sabha, Kumbakonam.

ஸ்ரீ

திருக்குடந்தை.

நாளது தாது-ஹு சித்திரை-மீ 12உ வெள்ளிக்கிழமை அக்ஷய திருதியை. அன்று காலையில் ஸ்ரீ ஆராவமுதாழ்வானுக்கு கருடோத்ஸவம். மற்றும் ஸ்ரீ சக்ரபாணிஸ்வாமி ஸ்ரீ ராமஸ்வாமி முதலான எம்பெருமான்கள் பெரியதெரு அலங்காரப்பந்தலில் கருடாரூடர்களாய் ஸேவை ஸாதிப்பார்கள். இப்பன்னிரண்டு கருடோத்ஸவம் மிகவும் சிறப்பாக நடைபெறும்

சித்திரை-மீ 13உ ஸ்ரீ ஆராவமுதாழ்வான் ப்ரஹ்மோத்ஸவத்தின் திருமுளைத்திருநாள்.

ஷை-மீ 14உ நகரசோதனை, இவ்விரண்டு தினங்களிலும் ஸேனாபதி ஆழ்வான் உத்ஸவம்

ஷை 14உ எல்லா திவ்யதேசங்களிலும் எம்பெருமானார் (ஸ்ரீ பாஷ்யகாரர்) திருநக்ஷத்திரம் ஷை உத்ஸவம் ஸ்ரீபெரும்பூதூரில் மிகவும் விமரிசையாய் நடைபெறும்.

சித்திரை-மீ 15உ திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதாழ்வான் (ஸ்ரீ சார்ங்கபாணிஸ்வாமி) துவஜாரோஹணம்.

18உ வியாழக்கிழமை கருடோத்ஸவம்.

22உ காலையில் திருப்பல்லக்கில் வெண்ணைத்தாழி ஸேவை.

23உ சித்திரை நக்ஷத்திரத்தில் திருத்தேர்.

ஷை உத்ஸவத்தில் ஸ்ரீ சக்ரத்தாழ்வானும் ஸ்ரீ ஆராவமுதாழ்வானுடன் சேர்ந்து ஸேவை ஸாதிப்பது மிகவும் மனோஹரமாகவிருக்கும்.

இந்நகர் ஸ்ரீ ராமன் ஸந்நிதியில் ஸ்ரீ ராமநவமி ப்ரஹ்மோத்ஸவம், தர்மகர்த்தர்களால் வழக்கம்போல் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது போற்றத்தக்கதேயாகும்.

சித்திரை 24உ திருமாலிஞ்சோலை ஸ்ரீ அழகர் சித்திரா பௌர்ணமி உத்ஸவம் மிகச்சிறப்பாக நடக்கும்.

நாணயம் நம்பிக்கைக்கு உத்திரவாதம்.

K. B. B. ஸீல்போட்ட

புதுமாதிரியான தங்க நகைகளும் வெள்ளி பாத்திரங்களும் ஸரஸமான விலைக்கு குறித்த டயத்தில் கிடைக்கும்.

கோ. பா. பால்சாமிசெட்டியார்,

ஷராப்புக்கடை பெரிய கடைத்தெரு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at The Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam and Published by T. R. Ananthachariar, Secretary, Parankusa Baktha Sabha, Kumbakonam.